20th January 1961]

Sri A. GOVINDASAMY : மெர்க்குரி விளக்குகள் இறக்குமதி செய்வதில் சங்கடம் இருக்கும் காரணத்தினால்தான் சென்னையில் போதுமான விளக்குகள் போடமுடியவில்லையாதலால், அந்த சங்கடங்களைத் தவிர்த்து இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : நான் அதைப் பற்றித்தான் பதிலில் சொன்னேன். விளக்குகள் கிடைக்காத காரணத்தினால்தான் கால தாமதம் ஏற்பட்டது. இன்னொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கமே, மத்திய அரசாங்கத்தை பல்புகள் தருவிப்பதைப்பற்றி கேட்டுக்கொண்டிருக்கிறது. வேண்டிய பல்புகளைத் தருவிக்கும்படி அரசாங்கம் கார்ப்பொரேஷனையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that three Mercury Discharge lamps are allotted for every division in the City of Madras and so 300 lamps are available to be used in the respective divisions in the City? Therefore, it is not possible to divert a few lamps to the Marina Beach? What is the exact position and will the Hon. Minister kindly say why there is paucity of Mercury Discharge lamps?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : With regard to the first part of the question, I have no information. But as regards the second part of the question about mercury lamps, from the information that we have been able to gather from the Corporation, we understand that they have already replaced 50 per cent of the fused lamps on the Beach Road and others will be replaced shortly. About the allotment of lamps, I request the hon. Member to put a separate question.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், ஒரு பக்கத்தில் குடிசை வாழ் மக்கள் கஷ்டமான வாழ்க்கை நடத்தும்போது, அதே நேரத்தில் மிகவும் அலங்காரமான பகுதிகளை மேலும் மேலும் அலங்காரமாக்கும் விஷயத்தில் கொஞ்சம் நிதானிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

(பதிலில்லை.)

Reservoir across Kamandala Nadhi

* 40 Q.—**Sri S. M. ANNAMALAI** : Will the Hon. the Minister for Home be pleased to state whether the scheme of constructing an anicut across Kamandala river near Shanbagathope will be included in the Third Five-Year Plan?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்த ரிஸர்வாயரைக் கட்டுவதைப்பற்றி சுமார் 30, 40 கிராமத்தவர்கள் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். இதனால் 30, 40 கிராமத்தவர்கள் பலனடை

வார்களாதலால், இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது எத்தனையோ முறை பரிசீலனை செய்யப்பட்டது. முதலில் தண்ணீர் கிடையாது. இரண்டாவது கட்டினால் செலவு அதிகம் ஆகிறது. மூன்றாவது, ஏரிகள் இருந்தால் நிறப்பலாம் என்றாலும் ஏரிகளும் இல்லை. ஆகையால் மேற்கொண்டு இதைப் பரிசீலனை செய்வது பயனற்றது என்று கைவிடப்பட்டது.

Package Deal Scheme (Thanjavur)

* 40-A. Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the total amount to be spent under the Package Deal in Thanjavur district this year;

(b) the amount expected as contribution from the Centre; and

(c) the nature and extent of the aid to be received from the Ford Foundation Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Rs. 23·25 lakhs.*

(b) Rs. 4·82 lakhs.*

(c) A grant of Rs. 15·37 lakhs.*

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இதுவரையில் இந்தத் திட்டத்தின்கீழ் கடனாகப் பணமும் உரமும் எவ்வளவு வழங்கப்பட்டது ? நிலச் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது ? நிலம் இல்லாது உழவு வேலை செய்யக் கூடியவர்களுக்கு—கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸுக்கு—எவ்வளவு கொடுக்கப்பட்டது ? கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸ் என்பதை எந்த முறையில் எப்படி நிர்ணயிக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவரங்களை யெல்லாம் அளிப்பதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்தத் திட்டத்தின் கீழ் தஞ்சை ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட உரம் முதலியன வெளி ஜில்லாக்களுக்கு கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளனவா ? அப்படியானால் அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி வழங்கப் படுகின்ற உரம் வெளி ஜில்லாக்களுக்குக் கொண்டு போகப் படுகிறது என்று அதிகமாகப் புகார் இல்லை. ஒன்றிரண்டு விஷயத்தில் அந்த மாதிரியும் நடந்திருக்கலாம். பற்றாக்குறை

* These figures are tentative and are based on present estimates.